நாடி

Pulse of the Singapore Muslim Community

*நாடி 9 ஹிஜ்ரி 1430 துல்ஹஜ் டிசம்பர் 2009* இலவசம்

# முனைப்பாற்றலுடன் தொடர்ந்து முன்னேறுவோம்



# சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றம் மென்மேலும் தொடரும்

நோன்புப் பெருநாள் 20.9.2009 அன்று சிங்கப்பூரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரதமரும், அமைச்சர்களும், சமூக அமைப்புகளின் தலைவர்களும் நல்வாழ்த்துகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

சிங்கப்பூர் மலாய், முஸ்லிம் சமூகம் முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது. சாதித்து வருகிறது. முன்னேற்றம் மென்மேலும் தொடர வேண்டும் என்பதே வாழ்த்துச் செய்திகளின் கருவாகவும் உருவாகவும் அமைந்தது.

சுற்றுப்புற, நீர்வள, முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், குடியரசில் முஸ்லிம் சமூகம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது என தமது செய்தியில் தெரிவித்தார்.

“நமது முஸ்லிம் சமூகம், குடும்ப நல்லுறவைக் கட்டிக்காக்கும் அதே வேளையில் மாறிவரும் பொருளியல் சூழலுக்கு ஏற்ப செயல்பட்டு முன்னேறிவருகிறது. மேலும், நீண்ட காலத்திற்கு வளமாக நீடிப்பதற்கு உடல்நலமும், குடும்ப வளமும் அவசியம். அதனால் அந்த அம்சங்களில் சமூகம் அக்கறை செலுத்த வேண்டும் என்றார் அமைச்சர்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் கல்விக்கும், சமூக வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும், உதவிக்கரம் நீட்டிவரும், சமூகத் தலைவர்களையும், தொழிலதிபர்களையும், தொண்டூழியர்களையும் அவர் பாராட்டினார்.

பல குடும்பங்கள் தங்கள் நல்வாழ்வுக்குத் தாங்களே பொறுப்பேற்றுக் கொண்டு மெதுவாகவும், அதே சமயத்தில் வலுவாகவும் பங்காற்றி வருகின்றன. அந்தக் குடும்பத்தினர் பாடுபட்டு உழைத்து, பொருளீட்டி, பிள்ளைகளைக் கல்வி பயிலச் செய்கின்றனர். அதன் மூலம் முன்னேறிவரும் சிங்கப்பூர் சமூகத்துக்கு முஸ்லிம்களால் உதவ முடிகிறது. தொடர்ந்து நமது சமூகம் முன்னேற வேண்டும்.



மாறுபட்ட சிலரின் பேச்சுக்கு செவிசாய்க்காமல், கவனத்தைச் சிதறவிடாமல் முன்னேற்றத்தை இலக்காகக் கொள்ள வேண்டும். நீண்டகால வளப்பத்துக்கு நமது நிதிவளமும் உடல்வளமும் மிக்க அவசியம். இதற்காக, குடும்பத்தினர், நண்பர்கள், சகாக்கள் அனைவரும் ஒன்றுகூடி உண்பதையும், கலந்துறவாடி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதையும் குறைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் தமது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

## உதவிக்கரம்

சிங்கப்பூர் முஸ்லிம்கள் ரமலான் மாதத்தில் வசதி குறைந்த மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளனர். ஆண்டு முழுவதும் இந்த உதவி சென்றடைய ஆவன செய்ய வேண்டும். பொருளியல் மந்தநிலைக் காலத்தில் அது அவசியம். திட்டமிட்டு செலவு செய்வதை இக்கால கட்டத்தில் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று பெருநாள் தொழுகையின் போது டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

தொழிலதிபர்கள் மனமுவந்து வசதி குறைந்த முஸ்லிம்களுக்கு உதவ வேண்டும். ஹாஜி அப்துல் ஜலீல் ரமலானுல் ஆலமீன் நிதிக்கு ஒரு லட்சம் வெள்ளி நன்கொடை வழங்கியது சிறந்த எடுத்துக்காட்டு என பாசிர் ரிஸ் இஸ்திக்ஃபார் பள்ளிவாசலில் நடைபெற்ற பெருநாள் தொழுகையில் கலந்து கொண்ட போது அவர் தெரிவித்தார். தலைமை முஃப்தி சையது ஈஸா அல் சமைத் தொழுகையின்போது நிகழ்த்திய உரையில் பயன்மிக்க நற்செய்திகளை வழங்கினார்.

# முயிஸ்
# வரலாற்று நூல் வெளியீடு

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்தின் 40 ஆண்டு வரலாற்றை எடுத்துரைக்கும் நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

முயிஸ் அரங்கில் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியுடன் - செப்டம்பர் மாதம் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அதிபர் எஸ்.ஆர். நாதன் நூலை அதிகாரபூர்வமாக வெளியிட்டுச் சிறப்பித்தார்.

முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சரும் சுற்றுப்புற, நீர்வள அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம், முயிஸ் தலைவர் அலமி மூஸா, முன்னாள் செயலாளர் சையது ஹாருன், செயற்குழு உறுப்பினர் ஷேக் அப்துல்லா முதலானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

கடந்த காலப் பாதையில் கடுமைகளைச் சந்தித்தபோதிலும் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடி மகிழலாம். ஒருங்கிணைந்து செயல்பட்டதால் நாம் வெற்றி பெற்றுள்ளோம் என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் வெற்றியைக் கொண்டாடும் நூலே இது என்று முயிஸ் தலைவர் குறிப்பிட்டார்.

150 பக்கங்களைக் கொண்ட இந்த நூல், காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து கட்டம் கட்டமாக சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் அடைந்துள்ள முன்னேற்றத்தை விவரிக்கிறது. வரலாற்றுப் பதிவான இந்த நூலில் அரிய புகைப்படங்களும் தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

முயிஸ் 1968-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன் சமூக, சமய நற்பணிச் சாதனைகளை சிங்கப்பூரர்கள் நன்கறிவர். பள்ளிவாசல்களைக் கட்டும் பணியில் முயிஸ் முனைப்பாக ஈடுபட்டு வந்தது.

எம்பிரஸ் பிளேசில் ஒரு சிறிய அலுவலகத்தில் முயிஸ் இயங்கத் தொடங்கியது. அதன் அலுவலர்கள் பள்ளிவாசல்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் இறங்கியதாக ஓய்வு பெற்ற முயிஸ் செயலாளர் சையது ஹாருன் தெரிவித்தார்.

1975-ல் பள்ளிவாசல் கட்டுமான நிதி தொடங்கப்பட்டது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தினால் திரட்டப்பட்ட அந்த நிதியின் மூலம் 120 மில்லியன் வெள்ளிக்கு மேற்பட்ட செலவில் 23 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன.

முயிஸ் வெற்றிகரமாக பல நற்பணிகளைச் செய்து வருவதற்கு சமூக ஒற்றுமையும் தொண்டூழியர்களின் அரும் பணியுமே காரணம் என்று செயற்குழு உறுப்பினர் ஷேக் அப்துல்லா கூறினார்.

முயிஸில் இந்திய முஸ்லிம்களின் பங்கு குறித்தும் கருத்துரைக்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டில் இந்திய முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. நான்கு உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழு தொடக்கமாக, இளையர்களின் பிரச்சினை, கல்வித்திறன், மாதர் நலம், மணமுறிவு விவகாரங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தியது.

இந்திய முஸ்லிம்கள் இஸ்லாமியக் கல்வியையும், பள்ளிவாசல்களில் நடைபெறும் மார்க்கச் சொற்பொழிவுகளையும் அறிந்து கொள்வதற்கு வசதியாக, இந்திய முஸ்லிம் குழு தமிழில் அவற்றை அறிமுகப்படுத்தியது. குழுவின் தலைவர் ஷேக் அலாவுதீன் இதனைக் குறிப்பிட்டார்.

# இந்திய முஸ்லிம் பேரவையின் தேசிய தின விழா
## சமூக மேம்பாட்டு கருத்தரங்கு 2010ல் நடைபெறும்

இந்திய முஸ்லிம் பேரவையின் ஏற்பாட்டில் சிங்கப்பூரின் 44வது தேசிய தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுல்தான் பள்ளிவாசல் நிகழ்ச்சி அரங்கில் 2.8.2009 அன்று நடைபெற்ற விழாவில் மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தேசிய தினப் பற்றுறுதி, சிறப்புச் சொற்பொழிவு, விருதளிப்பு, இளையர்களின் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம் பெற்றன.

16 இந்திய முஸ்லிம் அமைப்புகளும் இணைந்து தேசிய தின விழாவை நடத்துவது ஒரு சாதனை என ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் மு.அ.மசூது தமது வரவேற்புரையில் கூறினார்.

பேரவையின் சில முக்கிய செயல் திட்டங்களை வெளியிட்டார். ஜாமியா சிங்கப்பூரின் ஒத்துழைப்புடன் 2010ல் தேசியக் கருத்தரங்கு நடத்தப்படும். சிங்கப்பூரில் இந்திய முஸ்லிம்கள் - நேற்று, இன்று, நாளை என்ற கண்ணோட்டத்தில் சாதனைகளைப் பதிவு செய்வது காலத்தின் கட்டாயம். நாகூர் தர்கா, இந்திய முஸ்லிம் பள்ளிவாசல்கள், உமறுப் புலவர் உயர்நிலைப் பள்ளி போன்றவற்றின் வரலாறு நிலைபெற வேண்டும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகத்தின் மேம்பாட்டுக்கான களங்களைக் கண்டறிந்து செயல் திட்டத்தை வகுப்பது கருத்தரங்கின் இலக்கு. சமூக முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கை கொடுக்கும் ஹாஜி அப்துல் ஜலீல் போன்ற மேலும் பல தொழிலதிபர்களையும் புரவலர்களையும் உருவாக்கும் திட்டத்திலும் இந்திய முஸ்லிம் பேரவை முனைப்பாக ஈடுபடும் என்று கடையநல்லூர் முஸ்லிம் லீகின் செயலாளருமான ஹாஜி மு.அ.மசூது தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத், தமிழில் தேசிய தின வாழ்த்து கூறி அனைவரையும் மகிழ்வித்தார். "தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். தேசிய தின வாழ்த்துகள்! உங்களைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்" எனக் கூறியபடி உரையாற்றினார். சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகம் முன்னோர்களின் சாதனைகளை எண்ணி மகிழ்வதோடு இருந்துவிடாமல், அவர்கள் காட்டிய வழியில் முனைப்பாற்றலுடன் தொடர்ந்து முன்னேற வேண்டும் என வலியுறுத்தினார்.

விரிவான இன்றைய சிங்கப்பூர் சமூகத்திற்கு ஏற்ப இந்திய முஸ்லிம் அமைப்புகள் செயல்பட வேண்டும். மெண்டாக்கி. முயிஸ், சிண்டா, ஜாமியா முதலான அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். ஒத்துழைப்புத் திட்டங்கள் மூலம் முஸ்லிம் சமூகத்தின் கல்வி, வசதி குறைந்தோருக்கான உதவி முதலான பயன்களைப் பெறலாம் என்று அமைச்சர் கூறினார்.

ஜாமியா சிங்கப்பூர் தலைவர் அபூபக்கர் மைதீன் அவர்களின் நற்பணியைப் பாராட்டி சிறப்பு விருது வழங்கப்பட்டது. இந்திய முஸ்லிம் சமூகத்திற்கு கடந்த நாற்பது ஆண்டுகளாக அவர் ஆற்றிவரும் அரிய சேவைகளை மலபார் முஸ்லிம் சங்கத்தின் ஜனாப் நஸீம் தமது பாராட்டுரையில் விவரித்தார். மூத்த துணை அமைச்சர் ஜைனுல் ஆபிதீன் ரஷீத் இந்திய முஸ்லிம் பேரவையின் விருதை ஜாமியா தலைவருக்கு வழங்கினார்.

நமது தேசிய தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்ச்சி சிறப்பு மிக்கது என ஜாமியா சிங்கப்பூரின் தலைவர் அபூபக்கர் மைதீன் தமது நன்றியுரையில் குறிப்பிட்டார். தமிழில் தேசிய தின வாழ்த்து கூறினார்.

நமது சமூகம் மற்றும் நாட்டின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் நாம் ஒருங்கிணைந்து சிந்தித்து செயல்படவேண்டிய கடப்பாட்டை உணர்த்தும் விழா இது என அவர் வருணித்தார். நமது முன்னோர்கள்

வகஃப்பு சொத்து வடிவில் செல்வத்தைத் திரட்டி வைத்தனர், அவை சமுதாயத்திற்கு இன்று பலனளித்துக் கொண்டிருக்கின்றன. அது போன்ற சொத்துகளைப் பெருக்குவதில் நாமும் நமது பங்கையாற்ற வேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப நாம் முனைப்பான செயல்திறனுடன் சமூக, தேசிய முன்னேற்றத்திற்கு பங்காற்ற வேண்டும் என்று ஜாமியா தலைவர் கூறினார். இந்திய முஸ்லிம் பேரவையின் நற்பணிகளுக்கு ஜாமியா ஒத்துழைப்பு நல்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்திய முஸ்லிம் பேரவையின் தலைவர் ஹாஜா பஹ்ருதீன், தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீல், தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், கடையநல்லூர் முஸ்லிம் லீக் உள்ளிட்ட சங்கங்கள், அமைப்புகளின் பிரமுகர்கள் விழா அரங்கில் சிறப்பிக்கப் பட்டனர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக், தென்காசி முஸ்லிம் சங்கம், பென்கூலன் பள்ளிவாசல் மதரஸா, ஜாமியா கின்டர்கார்ட்டன் ஆகியவற்றின் மாணவர்கள் இசை, உரைஅரங்க, நாடக நிகழ்ச்சிகளை நடத்தினர்.

இந்திய முஸ்லிம் பேரவையின் துணைத் தலைவர் கே.எம்.தீன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# முயிஸ் சட்ட உதவி

சிங்கப்பூர் முஸ்லிம் குடும்பங்களுக்கு சட்ட விவகாரங்களில் முயிஸ் வழிகாட்ட முன் வந்துள்ளது.

அதன் தொடர்பில் முயிஸ் சட்டக் குழு அவசியமான உத்தரவுகளைப் பிறப்பித்து உதவும் என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் அறிவித்தார்.

முஸ்லிம்களுக்கான சொத்து ஆலோசனைக் கருத்தரங்கில் பேசிய அவர், கால மாற்றத்திற்கு ஏற்ப அமைப்புகளும் அவற்றை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

நிதிப் பிரச்சினையில் திட்டமிட்டு செயல்பட வேண்டும். அதற்குரிய நடைமுறைகளை மேம்படுத்துவது அவசியம் என்றார் அமைச்சர்.

உயில், மத்திய சேமநிதி நியமனம், கூட்டு உரிமம் போன்ற விவகாரங்கள் 16.7.2009 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் ஆராயப்பட்டன.

எடுத்துக்காட்டாக, கூட்டு வீட்டு உடமையாளர்களான தம்பதியரில் உயில் எழுதாமல் கணவர் மரணமடைந்து விட்டால், அவர்களுக்கு பிள்ளைகள் இல்லாத பட்சத்தில், சிவில் சட்டத்தின்படி வீட்டின் முழு உரிமையையும் மனைவியே பெறுவார். ஆனால் ஷரியா சட்டத்தின்படி வீட்டின் பாதி உரிமையை மட்டும் மனைவி பெறுவார். மறுபாதியை கணவரின் உடன்பிறந்தோர் அடைவர்.

அந்த வீட்டின் மற்ற உரிமையாளர்கள் வீட்டை விற்று, கிடைக்கும் தொகையைப் பங்குபோட வற்புறுத்தினால், மனைவிக்கு வசிக்க இடமில்லாமல் போகும்.

கருத்தரங்கில் இது போன்ற பிரச்சினை எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டது. உரிய தீர்வு காணமுடியும் என்று பத்வா குழு விளக்கம் அளித்தது.

மேம்படுத்தப்பட்ட முயிஸ் சட்ட வழிகாட்டலின்படி முஸ்லிம் கூட்டு வீட்டுரிமையாளர்களில் ஒருவர் மரணமடைந்தால், உயிரோடு இருப்பவர் சொத்தின் முழு உரிமையைப் பெற பல்வேறு இஸ்லாமிய சட்டமுறைகளைப் பயன்படுத்த முடியும். இச்சிறப்பு வழிமுறைகள் இல்லையென்றாலும் முரணான பல சட்ட அமைப்புகள் குடும்பங்களைப் பிரிக்க வேண்டிய அவசியமில்லை. பணஉதவி அதிகம் தேவைப்படும் விதவைத் தாய்க்கு மகனோ, மகளோ தங்கள் பங்கை விட்டுக்கொடுப்பதற்கு எந்தத் தடையும் இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

# புதிய ஹலால் சான்றிதழ்




முயிஸ் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய புதிய ஹலால் சான்றிதழ்களை அறிமுகப்படுத்துகிறது. அதன்படி ஹலால் உணவுகளை உற்பத்தி செய்யும் சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு ஹலால் தொழிற்சாலை முத்திரைச் சான்றிதழும் வழங்கப்படும். அதன்படி, அந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு பொருளிலும் ஹலால் முத்திரை பதிக்கப்படும். அக்டோபர் மாதத்திலிருந்து இவை நடப்புக்கு வரும் என்று இஸ்லாமிய விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் ஹலால் கருத்தரங்கில் அறிவித்தார்.

ஹலால் சான்றிதழில் பாதுகாப்பு அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்குப் புறம்பான முறைகளில் உணவுப் பொருள்களை உள்ளூர் நிறுவனங்கள் உற்பத்தி செய்ய முடியாது. மேலும், முயிஸின் ஹலால் சான்றிதழை வைத்திருக்கும் கடைகளில் விற்கப்படும் பொருள்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை புதிய அம்சங்கள் பலப்படுத்தும் என்று சுற்றுப்புற, நீர்வள அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

22.8.2009 அன்று நடைபெற்ற ஹலால் கருத்தரங்கில் பாதுகாப்பு அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

# ஹஜ் பயணச் சலுகைகள்



முயிஸ் ஹஜ் பயணம் தொடர்பான மாற்றங்களை அறிவித்திருக்கிறது. அதன்படி, முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்புவோர் அதிக காலம் காத்திருக்கத் தேவையில்லை.

தனியாக ஹஜ் செல்லவிரும்பும் பெண்கள் புதிய மாற்றங்களின்படி 40 வயதிலேயே இனி விண்ணப்பிக்கலாம். முன்னைய வயது வரம்பு 45. அதன்படி 45 வயதுக்குக் குறைவான பெண்களுடன் கணவர் அல்லது தந்தை போன்ற மிக நெருங்கிய உறவினர்கள் செல்ல வேண்டும்.

18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளுடன் ஹஜ் செல்ல விரும்பும் பெற்றோர்கள் இனிமேல் சேர்ந்தே விண்ணப்பிக்கலாம். முன்பு தனித்தனியாக விண்ணப்பம் செய்யும் நிலை இருந்தது. முயிஸ் 18.7.2009 அன்று இந்த மாற்றங்களை வெளியிட்டது.

இவ்வாண்டு ஹஜ் பயணம் செய்யும் சிங்கப்பூரர்கள் (H1N1) சளிக்காய்ச்சல் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. பயணிகள் முயிஸ் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. முயிஸ் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

# PHOTO NEWS படச் செய்திகள்



MUIS awards & President's Challenge 2009 cheque presentation ceremony 6 Sept 2009



Minister Yaacob Ibrahim performing Hari Raya Puasa prayers at Al Istighfar mosque



Charity sales 2009 at Sultan mosque 12 Sept 2009



Zakat disbursement function at En Naeem mosque 12 Sept 2009



Launch of Virtual Harmony Centre 11 Sept 2009



Iftar with muslims of other nationalities at SIH 11 Sept 2009




10 Annual Dialogue and Friendship dinner 1 Sept 2009




MMRS Investiture ceremony at SIH 19 Aug 2009

# மலபார் பள்ளிவாசல் கேம்ப் ஷுக்கூர் 10 முகாம்




மலபார் பள்ளிவாசல், சிறார்களுக்கான கேம்ப் ஷுக்கூர் பத்தாவது முகாமை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. கடந்த ஜூலை 4-ஆம் தேதி நடைபெற்ற முகாமில் 7 முதல் 13 வயதுடைய 45 சிறார்களுடன் 15 தொண்டூழியர்களும் கலந்து கொண்டனர்.

இந்த முகாமில் முதல் முறையாக சீன முஸ்லிம்களும், தாருல் அர்க்கத்தைச் சேர்ந்த இஸ்லாத்தைத் தழுவியவர்களும் கலந்து கொண்டனர். ஸாவ்பிங் (Zovbing) நிகழ்ச்சி அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

H1N1 சளிக்காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிறார்களின் வெப்பநிலை முறையாகச் சோதிக்கப்பட்டது.

முன்னைய கேம்ப் ஷுக்கூர் முகாம்களில் பங்கேற்ற சிலரும் இதில் கலந்து கொண்டனர்.

ஸாவ்பிங் நிகழ்ச்சி சிறார்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. அன்ஸார், முஹாஜிரீன் என இரு குழுக்களாகப் பிரிந்து முஸ்லிம் சகோதரத்துவக் கொள்கையை எடுத்துரைக்கும் நிகழ்ச்சி அது.

பிஷான் அன்-நஹ்தா பள்ளிவாசல், செங்காங் அல்-மவத்தா பள்ளிவாசல் ஆகியவற்றிலும் முகாமின் சில நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

நபி யூசுப்(அலை) அவர்களின் வரலாறு தொண்டூழியர்களால் உருவாக்கப்பட்ட மின்னியல் தகவல் சாதன உதவியுடன் எடுத்துரைக்கப்பட்டது முகாமின் மற்றொரு சிறப்பு அம்சம்.

சளிக்காய்ச்சல் பீதிக்கு இடையில், தாருல் அர்க்கம் போன்ற அமைப்புகளின் ஆதரவுடன் இறையருளால் வெற்றிகரமாக கேம்ப் ஷுக்கூர் முகாமை நடத்த முடிந்தது என ஏற்பாட்டாளர்கள் மனநிறைவு தெரிவித்தனர்.

முகாம்களுக்கு இளையர்களிடம் $10 வீதம் கட்டணம் பெறப்படுகிறது. அதே சமயம் ஏற்பாட்டளர்கள் $100 வீதம் அவர்களுக்குச் செலவிடுகின்றனர். தொண்டூழியர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் மலபார் பள்ளிவாசல் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.



# அல் அமீன் பள்ளிவாசல் இந்திய முஸ்லிம் மத்ரஸா நிகழ்ச்சிகள்

மஸ்ஜித் அல் அமீன் இந்திய முஸ்லிம் மத்ரஸா இரண்டு நாள் - ஓர் இரவு முகாமை அண்மையில் நடத்தியது. கடந்த மூன்று ஆண்டுகளில் முதல் முறையாக ஜுன் மாதம் முகாம் நடத்தப்பட்டதால் மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

சுமார் 40 மாணவர்கள் முகாமில் பங்கேற்றனர். நல்ல செயல் திட்டங்களும் பயனுள்ள பொழுதுபோக்கு அம்சங்களும் இடம் பெற்றன. இசை நாற்காலி, ஓட்டம், பந்தாட்டம், இஸ்லாம் குறித்த வினா-விடை நிகழ்ச்சி ஆகியவை அவற்றில் அடங்கும். உணவருந்தியபடி உரையாடல், கேரம் விளையாட்டு ஆகியவை முதல் நாளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இரண்டாம் நாள் காலை பஜ்ர் தொழுகைக்குப் பிறகு மாணவர்கள் விறுவிறுப்பான புதையல் வேட்டை முதலான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

முகாமின் நிறைவு நிகழ்ச்சியாக பரிசளிப்பு, அதிர்ஷ்டக் குலுக்கு நடைபெற்றன. MP4 இசை வட்டு, கைக் கடிகாரங்கள், புத்தகங்கள், விளையாட்டுச் சாதனங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

அல் அமீன் பள்ளிவாசல் வளாகத்திற்குள் முகாம் நடத்தப்பட்டதால் விளையாட்டுகள் மார்க்க நெறிமுறைகளுக்கு உட்பட்ட விதத்தில் இடம் பெற்றன. முகாம் பயன் மிக்கதாக அமைந்தது குறித்து மாணவர்கள் மனநிறைவு தெரிவித்தனர்.

மதரஸா மாணவர்கள் பயனடையும் விதத்தில் மேலும் பல முகாம்களை நடத்த ஏற்பாட்டுக் குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

## நடைப் பயிற்சி

அல் அமீன் பள்ளிவாசல் இந்திய முஸ்லிம் மதரஸா, துடிப்பாக முதுமையடைதல் மற்றும் குடும்பப் பிணைப்பை மேம்படுத்தும் முயற்சியில் கேளிக்கை நடை நிகழ்ச்சியையும் நடத்தியது.

ஜுன் மாதம் நடைபெற்ற "ஹெண்டர்சன் வேவ்ஸ் நடைப்பயிற்சி"யில் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் அதிகமானோர் இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப் பட்டவர்கள். மூத்தோரும் உற்சாகமாகக் கலந்து கொண்டது சிறப்பு அம்சமாக அமைந்தது. அலெக்சாண்ட்ரா ஆர்ச்சில் தொடங்கி இயற்கையழகு மிக்க வனப் பகுதியில் நடைபயின்று காலை உணவு உட்கொள்வதற்கு வசதியாக அல் அமீன் பள்ளிவாசலுக்கு அனைவரும் வந்து சேர்ந்தனர். வெளிப்புற நடவடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் அதிகமில்லாத மூத்த மாதர்களை இந்த முயற்சியில் ஈடுபடுத்தி உற்சாகமூட்ட வேண்டும் என்பதே முக்கிய இலக்கு என்று ஏற்பாட்டுக் குழுவினர் கூறினர்.

ஐம்பது வயதைத் தாண்டிய திருமதி பாத்திமா (இயற்பெயரல்ல) இந்த நடைப் பயிற்சியில் பங்கேற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். தெலுக் பிளாங்கா ஹெயிட்ஸ் பாலத்தைக் கடந்து மேலே வந்தது சுகமான அனுபவம் என்று வருணித்தார் அவர்.

ஹலால் ஃபுட்ஸ் பிரைவேட் நிறுவனம், பிரிந்தா இந்திய உணவகம் உள்ளிட்டவையும், சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம், கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஆகியவையும் இந்த நிகழ்ச்சிக்கு நல்லாதரவு வழங்கியதாக அவர்கள் தெரிவித்தனர்.

இத்தகைய நிகழ்ச்சிகளை பள்ளிவாசலின் ஒத்துழைப்புடன் அவ்வப்போது நடத்தும் விருப்பத்தையும் நாடியிடம் தெரிவித்தனர்.

# இனிய இஃப்தார் நிகழ்ச்சிகள்

சவுத் பிரிட்ஜ் ரோடு ஜாமியா சூலியா பள்ளிவாசலில் 5.9.2009 அன்று நடைபெற்ற நோன்புத் திறப்பில் மனிதவள அமைச்சர் கான் கிம் யோங் கலந்து கொண்டார்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கமும் சூலியா பள்ளிவாசல் நிர்வாகக் குழுவும் இந்த இஃப்தார் நிகழ்ச்சியை இணைந்து நடத்தின.

சிங்கப்பூரில் பல்வேறு சமூகங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை வலுப்படுத்துவது நிகழ்ச்சியின் நோக்கம் என்று ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் தலைவர் பரிஹுல்லாஹ் தெரிவித்தார்.

பிரதமர், தேசிய நாள் உரையில் சுட்டிக்காட்டிய நல்லிணக்கக் கோட்பாடுகளை யொட்டி பல இன, சமயப் பிணைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக சங்கத்தின் துணைச் செயலாளர் ஹாஜா மைதீன் வரவேற்புரையில் கூறினார்.

அமைச்சரும் நிகழ்ச்சிக்கு வருகையளித்த பிரமுகர்களும் பள்ளிவாசலைச் சுற்றிப் பார்த்தனர். கட்டட அமைப்பு குறித்து பள்ளிவாசல் நிர்வாகிகள் அவர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

### கடையநல்லூர் முஸ்லிம் லீக்

கடையநல்லூர் முஸ்லிம் லீக் 29.8.2009 அன்று குவின்ஸ்டவுன் அல் முஜாஹிதின் பள்ளிவாசல் வளாகத்தில் இஃப்தார் நிகழ்ச்சியை நடத்தியது.

மஸ்ஜித் நிர்வாகம், சிண்டா ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு பற்றிய ஆலோசனைகளும் கலந்துரையாடலும் குறிப்பிடத்தக்கவை.

பொருளியல் சிரமங்களை எதிர்நோக்கி யுள்ள சூழ்நிலையில் வேலைவாய்ப்புகளைப் பெற சிண்டாவின் உதவியை எவ்வாறு நாடலாம் என விளக்கம் அளிக்கப்பட்டது.

பல துறைகளில் 41 ஆயிரம் வேலைகள் தற்போது உள்ளதாக சிண்டாவின் திரு வேணுகோபால் தெரிவித்தார். பயனுள்ள கலந்துரையாடலும் இடம் பெற்றது. வேலை தேடும் முஸ்லிம் அன்பர்கள் சிண்டாவை அணுகினால் உரிய ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அல் முஜாஹிதின் பள்ளிவாசல் நிர்வாகமும் சிண்டாவும் இந்த நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிச் சிறப்பித்ததற்கு கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி நன்றி பாராட்டினார்.

நோன்பு திறப்புக்குப் பிறகு சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

### அப்துல் கபூர் பள்ளிவாசலில்

டன்லப் ஸ்ட்ரீட் அப்துல் கபூர் பள்ளிவாசலில் 29.8.2009 மாலை நடைபெற்ற நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் ஒரு புதிய முயற்சியாக 25 வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

பிற சமயத்தினரான அவர்கள் முதல்முறையாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு புனித நோன்புக் கடமையின் சிறப்பை அறிந்து கொண்டனர். நோன்பாளிகளுடன் கஞ்சி, பேரீச்சம் பழம், பிரியாணி ஆகியவற்றை உண்டு மகிழ்ந்து மனநிறைவு தெரிவித்தனர். இத்தகைய நல்லிணக்க நிகழ்ச்சி ஆண்டு தோறும் இடம்பெறும் என்று பள்ளிவாசல் நிர்வாகிகள் குறிப்பிட்டனர்.

மலபார் பள்ளிவாசல் உரிய அறிவிப்புடன் அன்றாடம் 500 பேருக்குக் கஞ்சிப் பைகளும் 400 பேருக்கு இஃப்தார் உணவு வசதியும் வழங்கியது.

மஸ்ஜித் பென்கூலன், மஸ்ஜித் அங்கூலியா, சுல்தான் பள்ளிவாசல் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிவாசல்களும் சிறந்த இஃப்தார் ஏற்பாடுகளைச் செய்து புனித ரமலானைச் சிறப்பித்தன. சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

# குர்ஆன் ஓதி மகிழ்வித்த எகிப்தியர்




புனித ரமலான் மாதத்தில் திருக்குர்ஆன் ஓதுவதை கடமையாகப் பேணி வருகிறோம். திருக்குர்ஆனை உளம் உருக ஓதி உயர்வு பெற வேண்டும் என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லுரை. அதன் அருமை பெருமைகளை ஹதீஸ் நன்மொழி களில் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

நோன்பு மாதத்தில் புனித திருக்குர்ஆனை ஓதும் சிறப்பு நிகழ்ச்சி சிங்கப்பூரில் நடைபெற்றது. எகிப்து நாட்டைச் சேர்ந்த காரி முஹம்மது முஸ்தபா அஸ்ஸர்காவி அந்த நற்பணியைச் செய்தார். ஜாமியா சிங்கப்பூர் அவரை குடியரசுக்கு அழைத்திருந்தது.

நோன்பு திறக்கவும், தராவீஹ் தொழுகையில் கலந்து கொள்ளவும் திரண்டிருந்தோரிடையே திருமறை அத்தியாயங்களை காரி முஹம்மது முஸ்தபா அஸ்ஸர்காவி ஓதினார். அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

மலபார் மஸ்ஜித், ஜாமியா சூலியா பள்ளிவாசல், பென்கூலன் பள்ளிவாசல், மஸ்ஜித் அல் அமீன் முதலான பள்ளிவாசல்கள் இஃப்தார் வேளையில் திருக்குர்ஆன் ஓத அவரை அழைத்திருந்தன.

சிம்(SIM) பல்கலைக் கழக மலாய் கலாசார-முஸ்லிம் சங்கம், சிங்கப்பூர் மலாய் வர்த்தக தொழில் சபை, முஸ்லிம் சிறுநீரக அறநிறுவனம் உள்ளிட்ட அமைப்புகளும் காரி முஹம்மது முஸ்தபா அஸ்ஸர்காவியின் திருமறை ஓதும் நிகழ்ச்சியை நடத்திச் சிறப்பித்தன.

கடந்த ஆண்டு ரமலான் மாதத்திலும் காரி முஹம்மது முஸ்தபா அஸ்ஸர்காவி சிங்கப்பூருக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

# நல்லாசிரியர் முஹம்மது யூசுப்

## தமிழ் கற்பிக்கும் அரிய நூலை உருவாக்கியிருக்கிறார்

தெலுக் பிளாங்கா ரைஸ் தொடக்கப் பள்ளி ஆசிரியர் முஹம்மது யூசுப் நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார்.

தமிழ் முரசு இதழ் தொடக்கப் பள்ளி ஆசிரியர் பிரிவுக்கான விருதை இவருக்கு வழங்கியது. 45 வயது முஹம்மது யூசுப் 24 ஆண்டுகளாக ஆசிரியர் பணிபுரிகிறார்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் கல்விப் பணிபுரியும் இவர், தமிழ் கற்பிக்கும் உத்திகளை எடுத்துரைக்கும் அரிய நூலை உருவாக்கி இருக்கிறார்.

எங்கே விழுந்தது என்பது அதன் தலைப்பு. 6 முதல் 8 வயது மாணவர்களைக் கருத்தில் கொண்டு இந்தப் புத்தகத்தை உருவாக்கியுள்ளதாகக் கூறுகிறார் யூசுப். இதைத் தயாரிக்க எட்டு மாதங்கள் வரை ஆனதாக அவர் தெரிவித்தார். தமிழ் மொழியைக் கற்பிக்கப் பயன்படுத்தப்படும் புத்தாக்க உத்திகளில் இதுவும் ஒன்று என்றார் அவர். எப்படி?

இந்த நூலில் எழுத்துக்களைப் படிக்கலாம், அதே சமயம் படங்களைத் தொட்டு உணரலாம். அதற்கேற்றபடி புத்தகத்திலுள்ள கரடி நகரும்.

வாசிப்பில் மாணவர்களின் ஆர்வத்தையும் ஈர்க்க வேண்டும் என்ற அரிய நோக்கத்திலேயே இந்த நூலை உருவாக்கினேன் என்றார் யூசுப்.

தமிழ் மொழியை மாணவர்களுக்குக் கவர்ச்சியான முறையில் கற்பிக்க இவ்வித உத்திகள் உதவுவதாக ஆசிரியர்கள் கருத்துரைத்தனர்.

ஆசிரியர் யூசுப் படைத்துள்ள பெரிய அளவிலான இந்த நூலை எல்லா தொடக்கப் பள்ளிகளும் கல்வி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த ஜூன் 25 அன்று மில்லினியா கல்வி நிலையத்தில் நடைபெற்ற தமிழாசிரியர் கருத்தரங்கில் இந்த நூல் வெளியிடப்பட்டது.



மூத்த கல்வி, வர்த்தக, தொழில் துணையமைச்சர் எஸ்.ஈஸ்வரன் ஆசிரியர் யூசுபின் பணியை வெகுவாகப் பாராட்டினார். சிங்கப்பூரில், தமிழில் இவ்வித நூல் வெளியிடப்படுவது இதுவே முதல்முறை. தமிழ் மொழி கற்றல், கற்பித்தலில் இது ஒரு மைல் கல் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ் கற்றல், கற்பித்தலில் யூசுபைப் போல பல ஆசிரியர்கள் புத்தாக்க அணுகுமுறைகளைப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களைக் கற்கும் பணியில் வழிநடத்துவதோடு தங்கள் ஆற்றலை மென்மேலும் பெருக்கிக் கொள்ள கற்றல் வளங்களை உருவாக்குபவராகவும் விளங்க வேண்டும் என்று திரு. எஸ்.ஈஸ்வரன் பரிந்துரைத்தார்.

ஆசிரியர் யூசுப் ஆற்றிவரும் கல்விப்பணியை தெலுக் பிளாங்கா ரைஸ் தொடக்கப் பள்ளி முதல்வர் குமாரி கீதா துரைசாமி பாராட்டினார்.

ஆசிரியர் பணியைத் தொடங்கிய நாள் முதல் இன்றுவரை அவருக்கு அதே ஆர்வம், அதே துடிப்பு. மாணவர்களுடனான பிணைப்புடனும் ஈடுபாட்டுடனும் அன்றாடம் அவர் வகுப்பறைக்குள் நுழைவதைக் கண்கூடாகக் கண்டு மகிழ்கிறோம் என முதல்வர் கூறினார்.